# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, நாமக்கல்

முன்னிலை : திரு. T. கோகுலகிருஷ்ணன், B.A., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.

2024–ம் ஆண்டு ஜூலை மாதம் 03–ம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவராண்டு 2055, குரோதி வருடம் ஆனி திங்கள் 19–ம் நாள்

**MP. No. 08 / 2024 in STC. No. 1435 / 2022**

சாஸ்தா பவுல்டரி (Saasthaa Poultry)
உரிமையாளர் M. ஈஸ்வரமூர்த்தி (வயத 51),
த/பெ. மயில்சாமி,
3/11–2, குறுஞ்சேரி,
உடுமல்பேட் வட்டம்,
திருப்பூர் மாவட்டம். – மனுதாரர்/எதிரி

// எதிராக //

S. பிரசன்னகுமார் (வயது 60),
த/பெ. சாத்து நாயர்,
மேனேஜர், வாங்கிலி பவுல்டரி பார்ஃம்,
D.No.6/315–2A, திருச்சி ரோடு,
வாங்கிலி காம்ப்ளக்ஸ் முதல் தளம்,
நமக்கல் டவுன்,
நாமக்கல் வட்டம் மற்றும் மாவட்டம். – எதிர்மனுதாரர்/புகார்தாரர்

இம்மனுவானது கடந்த 20.05.2024–ம் தேதியன்று இந்நீதிமன்றக் கோப்புக்கு எடுக்கப்பட்டு கடந்த 11.06.2024–ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபொழுது மனுதார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. தங்கமுருகன், B.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. ஜெயராஜ், B.A., B.L., அவர்களும் ஆஜராகி எடுத்துரைத்தும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உ த் த ர வு

இம்மனுவானது எதிர்மனுதாரர் தரப்பில் முதன்மை விசாரணை செய்யப்பட்டுள்ள பு.சா.1 யை திரும்ப அழைத்து மனுதாரர்/எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க வேண்டும் என்று மனுதாரர்/எதிரியால் கு.வி.மு.ச. பிரிவு 311–ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம் :**

மனுதாரர்/எதிரிக்கு எதிராக எதிர்மனுதாரர் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138−ன்கீழ் தனிப்புகார் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. கடந்த 27.12.2022−ம் தேதியன்று எதிர்மனுதாரர் தரப்பில் பு.சா.1 முதன்மை விசாரணை செய்யப்பட்டு பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேற்படி வழக்கில் பு.சா.1 யை குறுக்கு விசாரணை செய்ய வேண்டி மனுதாக்கல் செய்யப்பட்டு அம்மனுவானது அனுமதிக்கப்பட்டு கடந்த 16.08.2023−ம் தேதி பு.சா.1 யை பகுதியளவாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டது. பின்னிட்டு மேற்கொண்டு பு.சா.1 யை குறுக்க விசாரணை செய்ய வாய்தா கொடுக்கப்பட்ட நேரத்தில் வழக்கறிஞர்கள் Boycott செய்ததால் பு.சா.1 யை குறுக்கு விசாரணை செய்ய முடியவில்லை. எனவே மேற்கண்ட காரணத்தினால் பு.சா.1 யை மனுதாரர்/எதிரியால் குறுக்க விசாரணை செய்ய முடியாமல் போய்விட்டது. மனுதாரர்/எதிரி தரப்பில் பு.சா.1 யை குறுக்கு விசாரணை செய்ய கு.வி.மு.ச.பிரிவு 311−ன் கீழ் மனுதாரர்/எதிரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்/எதிரிக்கு இவ்வழக்கில் நல்ல கட்சி உள்ளது. எனவே, இம்மனு மனுதாரர்/எதிரிதரப்பில் தாக்கல் செய்துள்ளார்.

**2. எதிர் உரையின் சுருக்கம் :**

2. (i) மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது சட்டப்படியும், சங்கதிகளின்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் இம்மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவையாகும். மனுதாரருக்கு எதிராக எதிர்மனுதாரர் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138−ன்கீழ் தனிப்புகார் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு கடந்த 27.12.2022−ம் தேதியன்று பு.சா.1 யை முதன்மை விசாரணை செய்யப்பட்ட தேதியிலிருந்து எதிரி தரப்பில் விசாரணைக்கு முன் வராமல் வேண்டுமென்றே வழக்கை நடத்தாமல் காலதாமதம் செய்யும் நோக்கத்துடனே வாய்தா வாங்கி வந்த நிலையில் பு.சா.1 யை எதிரி தரப்பில் முழுமையாக விசாரணை செய்யப்படவில்லை.

2. (ii) மேற்படி விசாரணையை முடித்து சமூகம் நீதிமன்றம் எதிரி தரப்பில் 313—ன் கீழான கேள்வி கேட்கப்பட்டு எதிரி தரப்பு சாட்சிக்காக வாய்தா போடப்பட்டு, பின்னிட்டு மனுதாரர்/எதிரி தரப்பில் பு.சா.1 யை குறுக்கு விசாரணை செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டு கடந்த 16.08.2023—ம் தேதியில் பகுதியளவு மட்டுமே குறுக்கு விசாரணை செய்துள்ளார்கள். முழுமையாக குறுக்கு விசாரணை செய்து முடிக்கக் கோரி வாய்தாக்கள் கொடுக்கப்பட்டு மனுதாரர்/எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் Boycott செய்யப்பட்டதால் குறுக்குவிசாரணை செய்து முடிக்க முடியவில்லை என்று கூறும் காரணம் ஏற்கும்படியாக இல்லை என்றும், இம்மனுவின் அசல் வழக்கானது தீரப்புரைக்கு வந்த பின்னர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது வேண்டுமென்றே வழக்கை முடிக்காமல் கால தாமதம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் மீண்டும் மனுதாரர்/எதிரி பு.சா.1 யை குறுக்கு விசாரணை செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கை காலம் கடத்த வேண்டுமென்ற எண்ணத்தில் மனுதாரர்/எதிரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வாதுரை கேட்கப்பட்டது

மனு, எதிர் உரை இந்நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இம்மனுவில், தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால்

இறுதியாக

3. மனுதாரர்/எதிரி தாக்கல் செய்துள்ள இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ?

**<u>4. தீர்வு</u> :**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்குக்கோப்பு பரிசீலிக்கப்பட்டது. வழக்கானது இருதரப்பு வாதுரைக்காக நிலுவையில் உள்ளதாகவும், இவ்வழக்கில் மனுதாரர்/எதிரி பு.சா.1 யை மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்/எதிரி வழக்கை காலம் கடத்த வேண்டுமென்ற எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்று எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

5. மனுதாரர்/எதிரிக்கு எதிராக எதிர்மனுதாரர் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138–ன்கீழ் தனிப்புகார் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. கடந்த 27.12.2022–ம் தேதியன்று எதிர்மனுதாரர் தரப்பில் பு.சா.1 முதன்மை விசாரணை செய்யப்பட்டு பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு கடந்த 30.03.2023–ம் தேதி கு.வி.மு.ச. பிரிவு 313–ன் கீழான கேள்வி கேட்டல் முடிக்கப்பட்டு எதிரி தரப்பு சாட்சிய விசாரணைக்காக வாய்தா வழங்கப்பட்டது. பின்னிட்டு கடந்த 07.08.2023–ம் தேதி இருதரப்பு வாதுரைக்காகவும் வாய்தா வழங்கப்பட்டது. இந்நிலையில் கடந்த 09.08.2023–ம் தேதி பு.சா.1 யை குறுக்கு விசாரணை செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனுவானது CMP.No.7205/2023 என்ற எண்ணாக கோப்பிற்கு எடுக்கப்பட்டு பு.சா.1 யை கடந்த 16.08.2023–ம் தேதி பகுதியளவு மட்டுமே குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்டது.

6. பின்னிட்டு பு.சா.1 யை முழுமையாக குறுக்கு விசாரணை செய்ய 25.08.2023, 01.09.2023, 19.09.2023 ஆகிய தேதிகள் கொடுக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யாததால் கனம் நீதிமன்றத்தால் Sumoto வாக முடிக்கப்பட்டு இருதரப்பு வாதுரைக்காக வாய்தா போடப்பட்டது. பின்னிட்டு கடந்த 10.10.2023–ம் தேதியில் மீண்டும் பு.சா.1 யை குறுக்கு விசாரணை செய்திட வேண்டி Re–Open மற்றும் Re–Call மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனுவானது CMP. No. 9431/2023 மற்றும் CMP.No.9432/2023 ஆகிய எண்களாக கோப்பிற்கு எடுக்கப்பட்டு அன்றைய தேதியிலேயே நிபந்தனைகளின் பேரில் அனுமதிக்கப்பட்டது.

7. பின்னிட்டு பு.சா.1 யை குறுக்கு விசாரணை செய்ய 18.10.2023, 31.10.2023, 16.11.2023, 06.12.2023, 20.12.2023, 30.01.2024, 05.03.2024, 25.03.2024, 22.04.2024, 25.04.2024 ஆகிய வாய்தாக்கள் கொடுக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யாததால் கனம் நீதிமன்றத்தால் Sumoto வாக மனு முடிக்கப்பட்டு இருதரப்பு வாதுரைக்காக வாய்தா கொடுக்கப்பட்டது.

8. இந்நிலையில் மனுதாரர்/எதிரி தரப்பில் பு.சா.1 யை விசாரணை செய்ய வேண்டுமென்று மனுதாரர்/ இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். இம்மனுவின் அசல் வழக்கில் பு.சா.1 யை குறுக்கு விசாரணை செய்யப்படும்போது வழக்கின் உண்மையான சங்கதிகள் இந்த நீதிமன்றத்திற்கு தெரிந்து கொள்ள வாய்ப்பு உள்ளது. பு.சா.1 யை குறுக்கு விசாரணை செய்திட மனுதாரர்/எதிரிக்கு வாய்ப்பு வழங்க வேண்டியது நீதியின் நலன் கருதியும், மனுதாரர்/எதிரியின் நலன் கருதியும் இம்மனு அனுமதிக்கப்படுவதினால் எதிர்மனுதாரர்/புகார்தாரருக்கு எவ்வகையிலும் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இல்லை. எனவே, மனுதாரர்/எதிரி பு.சா.1 யை முழுமையாக குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பாடததை கவனத்தில் கொண்டும், மனுதாரர்/எதிரி பு.சா.1 யை முழுமையாக குறுக்கு விசாணை செய்யய வேண்டியும் இம்மனுவை அனுமதித்து உத்தரவு பிறப்பிப்பதுதான் தான் நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

9. முடிவில் (i). மனுதாரர்/எதிர் இம்மனுக்களின் செலவுத் தொகையாக தலா ரூ.1,000/–த்தை எதிர்மனுதாரர்/புகார்தாரருக்கு வருகின்ற 16.07.2024–ம் தேதிக்குள் செலுத்த வேண்டும். அழைக்க 18.07.2024.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு சொல்லச் சொல்ல அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து பிழைதிருத்தம் செய்யப்பட்டு, 2024–ம் ஆண்டு ஜூலை மாதம் 03–ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்./–T. கோகுலகிருஷ்ணன்)
நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.

பின் இணைப்பு : இல்லை

(ஒம்./–T. கோகுலகிருஷ்ணன்)
நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.